
திருமூலர் பெருமான் வரலாறு



சி.எஸ். முருகேசன்

திருமூலர் பெருமான் வரலாறு

சி.எஸ். முருகேசன்

குறிஞ்சி
20, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
தொலைபேசி: 26502086

THIRUMOOLAR PERUMAAN VARALAARU

C.S. Murugesan

முதல் பதிப்பு	: 2005
விலை	: ரூ.10.00
மொத்தப் பக்கங்கள்	: 32
வெளியிட்டோர்	: குறிஞ்சி 20, டீச்சர்ஸ் கில்டு காலனி, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை-600 049. தொலைபேசி: 26502086
ஒளி அச்சு மற்றும் முன் அட்டை வடிவமைப்பு	: சு. அசோக்குமார், Digital Designer சென்னை-600 080. செல்: 94440 09048
அச்சிட்டோர்	: சென்னை ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 021. தொலைபேசி: 55692807

1/6

பதிப்புரை

பசுவின் உடல் எங்கும் பால் வியாபித்து இருந்தாலும் அது தன் தீஞ்சுவைப் பாலினைத் தன் மடியின் வழியாகவே வழங்குகின்றது. அதைப்போல இறைவன் நீக்கமற உலகமெங்கும் வியாபித்திருந்தாலும், சிறப்பாகச் சில குறிப்பிட்ட தலங்களிலும் கோயில்களிலும் இருந்து அருள்பாலிக்கின்றான்.

சில குறிப்பிட்ட சக்திகளே பல தலங்களுக்கும் சிறப்பையும், அருளையும் வழங்குகின்றது. சித்தர்களும், முனிவர்களும், தபசிகளும், வாழ்ந்த இடங்களும், அவர்கள் திருப்பாதங்கள் பட்ட இடங்களும், அவர்கள் சமாதி அடைந்த இடங்களும் சிறப்புத் தலங்களாயின.

இதுபோன்று நாயன்மார்களால் பாடல் பெற்ற தலங்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற தலங்களும் இன்றும் மங்காப்புகழும் பெருமையும் பெற்று விளங்குகின்றன.

நம் நாட்டில் வாழ்ந்த, இன்றும் இறவா நிலைபெற்று வாழ்ந்து வரும் சித்தர் பெருமக்களால் புகழ்பெற்ற தலங்களைத் தெரிந்து கொள்வதும், அத்தலங்களைத் தரிசித்து அம் மகான்களின் அருளை நாம் பெற வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே பதினெண் சித்தர் பெருமக்களின் வரலாறையும், அவர்கள் திருவடிபட்ட, சமாதி அடைந்த தகவல்களை அறிந்த அந்த மங்காப் புகழ்பெற்ற திருத்தலங்களைத் தரிசித்து பலன் பெறுவதற்காகவும், இந்த

வரலாற்று நூலினை அடியார்கள் அருட் பாாவைக்காக அச்சில் வடிக்க உள்ளோம்.

சித்தர் இலக்கியங்களைத் தொடர்ந்து வழங்கி வரும் அன்பர் திரு. சி.எஸ். முருகேசன் அவர்கள் பெரிதும் முயன்று பல்வேறு நூல்களைப் படித்து, ஆய்ந்து, திருமூலர் வரலாற்றை நமக்காக வடித்துத் தந்துள்ளார்.

இதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மண்ணில் அடங்கி அமரத்துவம் பெற்ற மெய்ஞானிகள் காலவரம்பின்றி நம்முடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது உண்மை.

அவர்கள் கண்டறிந்த பல உண்மைகளை நமக்குப் பாடல்களாக விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களது பாடல்கள் மறைபொருளாகவே உள்ளன. அதுபோலவே அவர்களின் பலரது வாழ்க்கையும் அதைப்போன்றே மறைபொருளாகவே உள்ளது. இருப்பினும், பல நூல்களில் காணப்பெறும் அகச் சான்றுகளைக் கொண்டு வரலாறுகளை இயன்றவரை தொகுத்து இந்நூலில் தந்துள்ளோம்.

முழுமையாகக் கொடுப்பதாயின் ஒவ்வொரு சித்தர் வரலாறும் ஒரு முழு நூல் அளவாக விரியும். இருப்பினும், திருமூலர் வரலாற்றை மட்டும் இந்நூலில் சுருக்கமாகத் தந்துள்ளோம்.

- பதிப்பகத்தார்

திருமூலர் பெருமான் வரலாறு

கயிலாத் தொரு சித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலா நோயுடன் வீயத் துயர நீடும்
பசுக்களை கண்டு அவனுடலில் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொரு பாவாகக்
குயிலாரும் அரசடியிலிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாலே

- திருத்தொண்டர் புராணசாரம்

திருமூலர் கயிலாயப் பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர்களில் முதலாமவரும் முதன்மையானவருமான சிவபெருமானிடமும் நந்தீசரிடமும் உபதேசம் பெற்றவர்.

சித்தர் வரலாற்றிலே திருமூலர் என்ற பெயருடைய இரண்டு சித்தர்கள் காணப்படுகின்றனர்.

திருக்கயிலாயத்திலே சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற் பெருங்காவல் பூண்ட திருநந்தித் தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் ஒருவராய், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்ற சிவயோகியார் ஒருவர். அகத்திய முனிவர் பால் கொண்ட

அன்பினாலே அவருடன் சிலநாள் தங்குவதற்கு எண்ணி, அம்முனிவர் எழுந்தருளிய பொதிகை மலையை அடைதற் பொருட்டுத் திருக்கயிலையிலிருந்து புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார்.

செல்லும் வழியில் திருக்கேதாரம், பசுபதி, நேபாளம், அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங்களைத் தரிசித்து காஞ்சி நகரையடைந்து திருவேரகம் பெருமானை இறைஞ்சிப் போற்றி அந்நகரிலுள்ள சிவயோகியர்களைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார்.

பின்னர் திருவதிகையை அடைந்து, புரமெரித்த பெருமானை வழிபட்டுப் போற்றி, இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் திருவம்பலத்தினைத் தன்னகத்தேக் கொண்டு திகழும் பொற் பதி[illegible]ாகிய பெரும்பற்றப்புலியூரை வந்தடைந்தார்.

தில்லைத் திருநடங்கண்டு மகிழ்ந்த சிவயோகியர் அங்கிருந்து புறப்பட்டு காவிரியில் நீராடி அதன் தென்கரையை அடைந்து திருவாவடுதுறையினை அடைந்து இறைவனைத் தரிசித்து நின்றார்.

ஆவடு துறையிறைவரை வழிபடுதலில் ஆராத பெருங்காதலையுடைய சிவயோகியார் அத்தலத்தை விட்டு அகன்று செல்லும் பொழுது காவிரிக்கரையிலுள்ள பொழிலிடத்தே பசுக்கூட்டங்கள் கதறி அழுதவனை எதிரே கண்டார்.

அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்று தொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பான் அங்குத் தனியே வந்து பசுக்களை மேய்ப்பவன்.

தான் எடுத்த பிறவிக்குக் காரணமாகிய வினைகள் நுகர்ந்து தீர்ந்தமையால் அவனது வாழ்நாளைக் கூற்றுவன் வந்து கவர்ந்து கொள்ள உயிர் நீங்கி அங்கு நிலத்தில் வீழ்ந்து கிடந்தான்.

மூலன் இறந்ததைக் கண்ட பசுக்கள் அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து கதறி வருந்தின.

மேய்ப்பவன் இறந்தமையால் பசுக்களடைந்த துயரத்தினைக் கண்ட அருளாளராகிய சிவயோகியரது உள்ளத்தில் இந்தப் பசுக்களின் துன்பத்தினை நீங்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இந்த இடையன் உயிர் பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்களின் துயரம் நீங்காது என்று கருதிய சிவயோகி தம்முடைய உடலை மறைவான ஓரிடத்தில் கிடத்திவிட்டு கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப் பிரவேசம்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை அவ்விடையனது உடம்பினுள் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார்.

மூலன் எழுந்ததும் பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடமபினை நாத்தழும்ப நக்கி, மோந்து கனைத்து மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளிக்கொண்டு தாம் விரும்பிய இடத்திற் சென்று புல் மேய்ந்தன.

திருமூலர் அதுகண்டு மனம் மகிழ்ந்து பசுக்கள் மேயுமிடங்களிற் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த அப்பசுக்கள் கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் முன் துறையிலே இறங்கி தண்ணீர் பருகி கரையேறி தத்தம் கன்றுகளை நினைந்து தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன.

அப்பசுக்கள் செல்லும் வழியிலே தொடர்ந்து சென்ற சிவயோகியார் பசுக்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்ற பின் தனித்து நின்றார்.

அவ்வேளையில் மூலனுடைய மனைவி பொழுது சென்ற பின்னரும் தன் கணவர் இன்னும் வரவில்லையே என்று எண்ணியவளாய் தன் கணவனைத் தேடி வந்தவள் மூலன் வடிவிலிருந்த சிவயோகியரைக் கண்டு வீட்டிற்கு அழைத்தாள்.

மூலரோ, தான் அவளுடைய கணவனல்லேன் என்றும், அவன் விதி முடிந்து இறந்து விட்டான் என்றும் கூறினார். கண் எதிரே நிற்கும் தன் கணவன் தான் இறந்து விட்டேன் என்று கூறுவதைப் பொறாதவளாய் அவ்வூரிலுள்ளோரை அழைத்து தன் கணவன் நிலையில் ஏற்பட்ட மாறுபாட்டினைக் கூறி அழுது நின்றாள்.

அங்குள்ள சான்றோர் மூலனுக்கு அறிவுரை கூறி அவளோடு வீடு திரும்புமாறு கூறினர். மூலன் உடலிலிருந்து சிவயோகியார் தன் நிலையை அவர்கட்கு எடுத்துக் கூறி, மறுபடியும் அவ்வுடலை செயலற்றதாக்கி நிரூபித்தார். கண்ணெதிரே நிகழ்ந்த அதிசயத்தினையும், மூலனுடைய உடலில் ஏற்பட்டிருந்த மாற்றத்தினையும் கண்ட சான்றோர் மூலன் மனைவியைத் தேற்றி அவளது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

தன்னுடைய பழைய உடலைத் தேடிச் சென்ற சிவனடியார் அஃது அங்கு காணப் பெறாமையால் மூலனுடைய உடலிலேயே நிரந்தரமாகத் தங்கி திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்து யோகத்தில் வீற்றிருந்து உலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம், யோகம்,

கிரியை, சரியை எனும் நால்வகை நன்னெறிகளும் விளங்கும் திருமந்திரமென்னும் நூலை,

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான் குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன்தானிருந் தானுணர்ந் தெட்டே"

எனும் திருபாடலைத் தொடங்கி ஓராண்டுக்கொரு பாடலாக மூவர்யிரம் பாடல்களைப் பாடியருளினார். பின்னர் இந்நூல் நிறைவுற்றதும் அதாவது மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

இவரது வரலாற்றை சேக்கிழாரடிகள் பெரிய புராணத்துள் விரிவாகவே கூறியுள்ளார்.

வேறொரு திருமூலரைப் பற்றிய செயதியும் சித்தர் கதைகளில் கூறப்படுகிறது.

மூலன் என்ற பெயருடைய அந்தணர் ஒருவர் மரணத்தையும், முதுமையையும் வெல்லக்கூடிய மார்க்கத்தைத் தேடி தவஞ் செய்ய தன் சீடனுடன் கஞ்ச மலைக்குச் சென்றார்.

இளமை தரும் மூலிகையையும் மரணத்தைப் போக்கும் மூலிகையையும் குருவும் சீடனுமாகத் தேடத் தொடங்கினர்.

ஒருநாள் மூலன் மூலிகையைத் தேடச் சென்றிருந்த சமயம்; சீடன் சமையல் செய்து கொண்டிருந்தான். வெந்து கொண்டிருந்த உணவைப் பக்கத்தில் கிடந்த ஒரு கோலையெடுத்துக் கிளறினான். உணவு கறுத்து விட்டது.

இதனைக் கண்ட சீடன் தன் குரு மூலன் வந்தால் கோபிப்பாரே என்று அஞ்சினான். அவ்வுணவைத் தான் உண்டு விட்டு வேறு உணவைச் சமைத்து வைத்தான்.

நீர் உணவை உண்ட சீடனுக்கு இளமை உண்டாகி விட்டது. நாற்பது வயதுக்கு மேல் ஆகிவிட்ட அவன், பதினெட்டு வயது இளைஞன் போல் அடையாளம் தெரியாமல் மாறிப்போனான்.

குருவும் அவ்விடம் வந்தார். அவரால் அவரது சீடனை அடையாளம் காண முடியவில்லை. ஆயினும் சீடன் தான் இளமையாக மாறின அதிசயத்தைக் கூறினான்.

மிச்ச மீத உணவு இல்லாததைக் கண்ட மூலன் தன் சீடன் உண்ட உணவில் சிறிதளவு கக்கச் சொல்லி அதனை உண்ட மறுகணமே அவருக்கும் இளமையுண்டாகி விட்டது.

இஃது செவிவழி கதையாக அறியப்படுகின்றதே அன்றி இவரைப் பற்றிய சித்தர் பாடல் தொகுப்போ ஆதாரங்களோ கிடைத்தில.

இஃது இப்படியிருக்க சதுரகிரித் தலபுராணத்தில் திருமூலரின் வரலாறு வேறொரு விதமாகக் கூறப்படுகிறது.

இந்த சதுரகிரியின் மகத்துவத்தை நந்தி திருமூலருக்குச் சொல்லி, திருமூலர் தனக்குச் சொன்னார் என்று காலாங்கிச் சித்தர் வருணிக்கிறார்.

நான்கு வேதங்களும் சேர்ந்து ஓர் உருவமாய்ச் சேர்ந்ததால் இம்மலைக்குச் சதுரகிரி என்ற பெயர் உண்டாயிற்று என்று கூறும் காலாங்கி நாதர், அங்கே விண்ணுலகத் தேவர்களும், மண்ணுலக மாந்தர்களும், அந்தர சஞ்சாரிகளாகிய கந்தர்வர்களும், பாதாள லோகவாசிகளாகிய ராட்சர், நாகர்கள் போன்றவர்களும் ஊனான உடலெடுத்து பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக சதுரகிரி மகாலிங்கரடியைப் போற்றிச்

சதாகாலமும் சேவித்து யோக நிஷ்டைகள் புரிந்து வருகிறார்கள் என்கிறார்.

இந்தச் சதுரகிரி மலையில் பல சித்தர்களும் தங்கி தவம் புரிந்ததாகக் காலாங்கி கூறுகின்றார்.

அவர்கள் கூறும் சதுரகிரி சிறப்பு ஒருபுறமிருக்க திருமூலர் வரலாற்றுடன் இத்தல புராணம் கொண்டுள்ள தொடர்பைக் காண்போம்.

பாண்டிய நாடு சித்த வித்தைக்குப் பேர் போனது. இறைவனாம் சிவபெருமானே சித்தராகத் திருவிளையாடல் புரிந்த நாடல்லவா அது.

அந்தப் பாண்டிய நாட்டை சுவேதன் என்ற மன்னர் அரசாண்டு வந்தார். பட்டத்தரசியான சுந்தர வல்லிக்கு, வீரசேனன் என்ற புதல்வனும், இரண்டாவது மனைவியான சந்திரவதனிக்கு தர்மார்த்தன், சூரசேனன், வஜ்ராங்கதன் என்ற புதல்வர்களும் இருந்தனர்.

குருகுல வாசம் முடித்த பின் உரிய வயதில் நான்கு இளவரசர்களுக்கும் திருமணம் நடந்தது.

வீரசேனனுக்கு குணவதியும் ,தர்மார்த்தனுக்கு தனமதியும், சூரசேனனுக்கு சுகமதியும், வஜ்ராங்கதனுக்கு மந்திரவல்லியும் மனைவிகளாக அமைந்தனர்.

மன்னராயிருந்த சுவேதன் முதுமையை அடைந்து விட்டதால், பட்டத்தரசியான சுந்தரவல்லியின் மகன் வீரசேனனுக்குப் பட்டம் சூட்டி அரசனாக்கினார். அரசனும் குடிகளைக் காக்கும் கோமானாக நல்லாட்சி புரிந்து வந்தார். அவ்வப்போது நகரச் சோதனைகள் புரிந்து நாட்டில் குற்றம் நிகழாமல் பார்த்துக் கொண்டார்.

வீரசேனனுக்குக் காலக்கிரமத்தில் ஆண் குழந்தை ஒன்றும் பிறந்தது. அரண்மனையெங்கும் ஒரே குதூகலம். மகனுக்கு பெயர் சூட்டுவிழா இனிதாக நடந்தேறியது. மகன் பிறந்த சந்தோஷத்தில் மாதக்கணக்காய் நகரச் சோதனைக்குப் போகாதது நினைவுக்கு வரவே அன்றிரவு நகரச் சோதனைக்குப் புறப்பட்டார்.

திரும்பி வந்த மன்னரின் உடலைப் பார்த்த குணவதி திடுக்கிட்டார். பார்வை மங்கிய நிலையில் உடல் முழுவதும் வியர்வையாக, துவண்டு போய் வந்த மன்னர் உடனே மஞ்சத்தில் படுத்துவிட்டார். இவருக்கு என்னவாயிற்று, பதறிய நிலையில் மன்னரிடம் அவரின் உடலநிலைக்கான காரணத்தைக் கேட்டாள். பதிலில்லை; மன்னர் வாயில் நுரை வர ஆரம்பித்தது.

குணவதியின் உடல் துடித்தது. என்ன செய்வதென்றே தோன்றாத நிலையில் அரண்மனை வைத்தியருக்கு அவசரமாக செய்தி அனுப்பினாள். அவர் வருவதற்குள் மன்னரின் தலை சாய்ந்து விட்டது. அரண்மனை மருத்துவர் பட்டாளமே ஓடிவந்து மன்னரைப் பரிசோதித்துவிட்டு அவர் இறந்ததை உறுதி செய்தது.

கணவர் மரண தேவதையிடம் போய்விட்டார் என்பதை அறிந்த மனைவி குரல் வெடிக்கக் கதறினாள். அவளின் அழுகையொலி அந்த அரண்மனையையும் தாண்டி ஒலித்தது. அந்த நட்ட நடுநிசியில் பாண்டிய நாடு சோகத்தில் புலம்பித் தவித்தது.

உறவினர்கள் கதறிய கதறலை விட ஊர்மக்கள், நாட்டு மக்களின் கதறல் தான் பெரும் சோகமயமாய் விளங்கியது. இப்படிப் புலபேர், பலவாறாகப் புலம்பிய சத்தம்

ஆகாயத்தையும் அலற அடித்தது போலும். அப்போது ஆகாய வழியாகப் போய்க் கொண்டிருந்த திருமூலரின் காதுகளிலும் இந்தப் புலம்பல் சோகம் கேட்டது. உடனே அவர் கீழே நோக்கினார்.

அங்கே மன்னனின் உயிரற்ற உடலைக் கண்டு சோகம் தாளாமல் குணவதியும் அரண்மனைச் சுற்றமும், ஊர் மக்களும் ஓலமிட்டு அழுது கொண்டிருந்தனர்.

விநாடிப் பொழுதில் திருமூலருக்கு எல்லாம் தெரிந்து விட்டது. அவர் அங்கு அழுபவர்களின் துயரைத் துடைக்கத் தீர்மானித்தார். உடனடியாகச் சதுரகிரிக்குப் போய்த் தான் தவம் செய்யும் குகைக்குள் நுழைந்தார. தன் அந்தரங்கச் சீடனான குருராஜன் என்பவனை அழைத்து தாம் சிறிது காலம் அவனைப் பிரிந்திருக்க வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்தார்.

சீடனும் குருவே தொடரட்டும் என்று காத்திருந்தான்.

மகனே! நான் சிறிது காலம் பூவுலகில், ஒரு மனிதனாக, அதுவும் மன்னனாக வாழ விரும்புகிறேன். பாண்டிய நாட்டின் தலைநகரம் இராசேந்திர்புரியில் அந்நாட்டு மன்னன் வீரசேனன் திடீரென்று மரணமடைந்து விட்டான்.

அவனுடைய மனைவியும், குடிமக்களும் துயரம் தாளாமல் ஓலமிட்டுஅழுத காட்சி என் மனதை நெகிழச் செய்து விட்டது. அதனால் அந்த வீரசேன மகாராஜவின் உடலில் பிரவேசித்து சிறிது காலம் உலக வாழ்க்கையில் ஈடுபட விரும்புகிறேன். நான் திரும்பி வருகிற வரை கல்ப சாதனையால் வயிரம் பாய்ந்து விளங்கும் இந்த உடலைக் காப்பாற்றி வைத்திருப்பாயாக என்று கூறினார்.

ஆ பசுக்களின் வருத்தத்தைத் தீர்க்க முன்பு சுந்தரானந்தர் உடலிலிருந்து இடையனாம் திருமூலரின் உடலில் புகுந்து தேவ உடலை இழந்து மனித உடலில் தங்கிவிட்டார். மறுபடியும் காயகல்பம் செய்து திருமூலனின் உடலை இப்பொழுது தான் தெய்வீக உடலாக மாற்றியுள்ளார். மறுபடியும் இந்த உடலுக்கும் சோதனை... ம்.. வீரசேனனின் உடலுக்காக இந்த திருமூலனின் உடலையும் இழக்கத் துணிந்து விட்டாரே? என்று சீடனுக்கு மனதுக்குள் சந்தேகம் தோன்றினாலும், வெளியே கேட்கவில்லை. குருவின் கட்டளைக்கு மறுவார்த்தை பேசியறியா அந்தச் சீடனும் அவரின் செயலுக்கு சம்மதம் தெரிவித்தான். திருமூலர் குகையில் மறைவான ஓர் இடத்தில் தன் உடலைக் கிடத்திவிட்டு சூட்சும உடலோடு மன்னன் உடல் இருந்த இடம் நோக்கி விரைந்தார்.

அதற்குள், அங்கே மன்னன் உடலைக்கழுவி முடித்திருந்தார்கள். கண்களில் கண்ணீர் வழிந்தோட குணவதி கதறிக் கொண்டிருந்தாள். அப்பொழுது திருமூலர் மன்னனின் உடம்பில் புகுந்தார்.

அதுவரை அசையாமல் இருந்த அனைவரையும் அழ வைத்துக் கொண்டிருந்த மன்னன் உடல் அசைந்தது. சுற்றி இருந்தவர்கள் திடுக்கிட்டனர். அழுகை ஒலி உடனே நின்றது. அதற்குள் திருமூலர், வீரசேனத் திருமூலராக எழுந்து விட்டார்.

இறந்த மன்னர் உயிரோடு எழுந்து நின்றதைப் பார்த்ததும் துயரக் குரல்களாக ஒலித்தது எல்லாம் மகிழ்ச்சிக் குரலாக மாறியது. என் கணவர் இறக்கவில்லை. நான் செய்த தவம் பலித்து விட்டது என்று ஆனந்தத்துடன் அரசன் மார்புமேல் சாய்ந்தாள் மகாராணி.

அவளை மெதுவாகத் தட்டிக் கொடுத்து விட்டு எழுந்து நின்ற அரசர், "நான்தான் எழுந்து விட்டேன். இன்னும் ஏன் துயரம்?" என்று கேட்டார்.

"அரசே! என்ன நேர்ந்தது? எதனால் மயக்கமுற்றீர்கள்? தாங்கள் இறந்து போய்விட்டதாக அல்லவா அரண்மனை வைத்தியர் கூறினார்" மகாராணி கேட்டார். அனைவரின் கவனமும் அவர் என்ன கூறப்போகிறார் என்பதிலேயே இருந்தது.

அரசர் மௌனமாயிருந்தார்.

"அரசே! நாங்கள்தான் தவறு செய்து விட்டோம். அரண்மனை வைத்தியன் தாங்கள் இறந்து விட்டதாக்க் கூறினான். அவனை உடனே கழுவில் ஏற்ற வேண்டும்" என்று சீறினார் முதலமைச்சர்.

"வேண்டாம்... அரண்மனை வைத்தியர் உண்மையைத் தான் கூறினார்."

அப்படியானால்?

"நான் செத்ததும் உண்மை. இப்பொழுது பிழைத்துக் கொண்டதும் உண்மை. எனக்குக் களைப்பாக இருக்கிறது. பிறகு பேசுவோம்" என்று கூறிவிட்டு அரசர் ராணியை அழைத்துக் கொண்டு நடந்தார்.

அரண்மனையில் ஏற்பட்ட பரபரப்புக்கும் குழப்பத் துக்கும் அளவே இல்லை. அனைவரின் குழப்பத்துக்கும் முடிவு கட்ட அரசரே தன்னிலை விளக்கம் அளிக்க முன் வந்தார்.

நகர சோதனைக்குப் போன இடத்தில் நந்தவனம் ஒன்றில் பூச்செடிகள் காற்றில் அசைந்தன. யாரோ கள்வனென்று

எண்ணி அருகே சென்றேன். அப்போது கடும் விஷமுள்ள பாம்பு ஒன்று செடிகளில் ஊர்ந்து கொண்டிருந்தது. செடிகள் காற்றில் அசையும் போது, அவற்றில் இருந்த கூர்மையான முள் ஒன்று பாம்பின் உடலில் குத்தியது. வலி தாங்காத பாம்பு சீறித் திரும்பியது. எதிரில் தெரிந்த பூ ஒன்றைப் பார்த்தது. அது தான் தனக்கு இடைஞ்சல் செய்தது என்று நினைத்து அதைக் கடித்து தன் விஷம் முழுவதையும் அதில் இறக்கிவிட்டுப் போயிற்று.

அழகான பூ விஷத்தோடு காற்றில் அசைந்து கொண்டிருந்தது. விஷத்தின் விஷயத்தைப் பற்றியறியாத நான், அப்பூவின் அழகிலும் மணத்திலும் மனதைப் பறிகொடுத்து அதைப் பறித்து முகர்ந்தேன். உடனே தலை சுழன்றது, கண்கள்இருண்டன. நான் இறந்து விட்டேன்.

அரசர் கூறிய கதையை ஆர்வமாக அனைவரும் கேட்டனர். "சரி அரசே! நீங்கள் எப்படி பிழைத்துக் கொண்டீர்கள்?"

"அதுதான் எனக்குத் தெரியவில்லை" என்று கூறிவிட்டு எழுந்து விட்டார் அரசர்.

எப்படியோ அரசர் பிழைத்துக் கொண்டாரே அந்த வகையில் மகிழ்ச்சிதானே என்று ஆறுதலடைந்து சென்றனர்.

திருமூல வீரசேன மகாராஜன் ஆட்சியில் நாட்டில் செல்வம் கொழித்தது. நீதி தழைத்தது. குற்றங்கள் குறைந்தன. மக்கள் அனைவரும் எவ்விதக் குறையுமின்றி மனநிறைவோடு வாழ்ந்தனர்.

எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கையில் குணவதியின் மனம் மட்டும் சந்தேகப் புழுவாக அரித்துக் கொண்டிருந்தது.

அரசர் தன் அருகில் இருக்கும் சமயங்களில் குணவதி உலகையே மறந்து விடுவார். அவர் ஒரே ஒரு கணம் அப்பால் சென்றுவிட்டால் கூட எல்லாவற்றையுமே இழந்து விட்டது போல் தவிப்பாள். ஆனாலும் அவள் மனதில் அந்த சந்தேகம் மட்டும் வளர்ந்து கொண்டே இருந்தது.

ஓர் இரவு இரண்டு பேரும் தனியாக இருந்த நேரத்தில் மெல்ல் பேச்சை எடுத்தாள்.

"முன்பெல்லாம் சட்டென்று கோபம் கொள்வீர்கள், யாராவது குற்றம் செய்தால் மன்னிக்கவே மாட்டீர்கள். இப்பொழுது..."

"நான் நல்லவனாகி விட்டேன், சந்தோஷம்தானே?"

"இல்லை நீங்கள் யார்? நாட்டையும் மக்களையும் அடியோடு மாற்றிவிட்ட நீங்கள் யார்... தாங்கள் பழைய மகாராஜாவே இல்லை. இதைத் தங்களுடன் இருக்கும் போது ஒவ்வொரு கணமும் நான் அதை உணர்கிறேன்."

திருமூல வீரசேனர் யோசனையிலாழ்ந்தார். இனியும் உண்மையைச் சொல்லாமலிருந்தால் விபரீதமாகி விடும் என்று தீர்மானித்தார்.

"உத்தமமான கற்புக்கரசியே! நீ நினைப்பது உண்மைதான்! நான் உன் கணவன் அல்ல. உன் கணவன் வீரசேனன் இறந்து விட்டான். அன்று ஊர் மக்களும், நீயும் அழுது புரண்டதைக் கண்டு மனம் இரங்கி வீரசேனனின் உடலில் புகுந்து கொண்டேன்.

"இன்று நீ என் மனைவி! இல்லை... வீரசேனன் மனைவி. இந்த உடல் வீரசேனன் உடல். இது உனக்கு மட்டுமே சொந்தமானது. உன்னுடைய உடலை எனக்குச்

சொந்தமானதாக நான் என்றுமே நினைத்ததில்லை. அது வீரசேனனுக்கு உரியது. வீரசேனன் மட்டுமே உன்னைத் தொடுகிறான். நேசிக்கிறான், நான் வெறும் ஆத்மா. உறவும் அதனால் உண்டாகும் பிணைப்பும் உடலுக்கு மட்டுமே பந்தமே தவிர, உயிருக்குக் கிடையாது. ஆன்மாவுக்குக் களங்கம் என்பதே ஏற்பட முடியாது. அதனால்தான் வீரசேனன் உடலில் நான் உன்னோடு பழகினேன். தவறென்றால் என்னை மன்னித்து விடு.

"ஐயோ! நான் தங்களை என் கணவராகக் கருதுகிறேன். நான் என் கற்புக்குக் களங்கம் ஏற்பட்டதாக நினைக்கவில்லை. தாங்கள் ஒரு மகாபுருஷர். உலக பந்தங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதை நான் யூகித்து விட்டேன். தாங்கள் யார்? எப்படி இந்த உடலில் பிரவேசித்தீர்கள்? தங்களுடைய பழைய உடல் என்னவாயிற்று? தங்கள் மேல் உள்ள அக்கறையினால் இதனைக் கேட்கிறேன்" என்றாள் குணவதி.

திருமூல வீசேனர் தயங்கவில்லை. தாம் யார் என்பதையும், தம் உடலை மறைத்து வைத்திருக்கும் ரகசியத்தையும் கூறினார்.

"உன் கணவரின் இந்த உடம்பு பஞ்ச பூதங்களால் ஆனது. அழிந்து போய்விடும். அதனால்தான் இந்த உடம்பில் நிரந்தரமாக இருக்க முடியாது. சதுரகிரியில் உள்ள ஒரு குகையில் என்னுடைய காயகல்ப உடம்பு இருக்கிறது. கொஞ்ச நாளில் நான் இங்கிருந்து போய்விடுவேன்" என்று வீரசேன திருமூலர் கூறியதும் குணவதி திடுக்கிட்டாள்.

"அரசே! தங்களின் உடம்பு அந்த மலைக் குகையில் காவல் இல்லாமல் இருக்கிறதே, அதற்கு ஏதாவது ஆபத்து

வந்து விட்டால் என்ன செய்வது? அந்த உடலை யாராவது பிணம் என்று கருதி எரித்து விட்டால் என்ன செய்வீர்கள்? இந்த உடல் நரை திரை மூப்புக்கு ஆளாகி அழியக்கூடியது அல்லவா? அழியக்கூடிய இந்த உடலுக்காக அழியாத தன்மை கொண்ட உடலை யாராவது இழப்பார்களா?" என்று வினவினாள்.

"பயப்படாதே குணவதி, என் சீடன் குருராஜன் அதை நன்றாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான். தவிர, கற்ப தேகத்தை சாதாரணத் தீயால் எரித்துவிட முடியாது. அதன் மேல் வெடியுப்பும், குங்கிலியமும், பொரிகாரமும் (வெங்காரம்) போட்டுத் தூளாக்கி, அந்த உடம்பில் பூசி, அதன் பிறகு அதை விராலி இலைகளால் மூடி, அகில் கட்டைகளை அடுக்கி எரி மூட்டினால்தான் அது எரிந்து சாம்பலாகும். அதனால் என் உடலைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்" என்றார் திருமூல வீரசேனர்.

குணவதியின் சிந்தனை வேலை செய்தது. 'நம் கணவர் இறந்து விட்டார். இப்பொழுது இருப்பதோ சித்த புருஷர். இந்த உண்மை நம்மைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. இவர் பிரிந்து போய்விட்டால், ராணி என்ற அந்தஸ்தை இழக்க வேண்டியிருக்கும்.

சித்த புருஷர் தன் பழைய உடலைத் தேடிப் போய்விட்டால்? உடனே தன்னுடன் இருக்கும் வீரசேன மகாராஜா இறந்து போவார். தான் விதவையாகி விட நேரிடும். தன்னுடைய சுகபோக வாழ்க்கையெல்லாம் நாசமாகி விடும். மன்னனின் சிற்றன்னை மகனான தர்மார்த்தன் மன்னனாவான். அதன்பிறகு தன்னுடைய வாழ்க்கைக் கேள்விக்குறியாக அல்லவா மாறி விடும்?

அப்படி ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமா? குணவதி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். குகையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சித்த புருஷரின் அந்தக் காயகல்ப உடலைக் கண்டுபிடித்து எரித்து விடுவது ஒன்றே தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள வழி என்று தீர்மானித்தாள்.

உடனே ஏன் எதற்கு என்று கேட்காமல் தான் சொன்னதை அப்படியே செய்யும் அரண்மனை ஆட்கள் சிலரை ராணி அழைத்தாள். சதுரகிரி குகையிலிருக்கும் சித்தரின் உடலைத் தேடிக் கண்டுபிடித்து எரித்து விடும்படிக் கட்டளையிட்டாள். அந்த உடலை எப்படி எரிக்க வேண்டும் என்பதற்கான வழியையும் கூறி அனுப்பினாள்.

குகையில் குருநாதரின் உடலுக்குக் காவலாக இருந்த குருராஜன் தன் குருநாதர் திரும்பி வந்து விடுவார் என்று நாட்கணக்கில், மாதக்கணக்கில், வருடக் கணக்கில் காத்திருந்து ஏமாற்றமடைந்தான். அவர் ஏதாவது இக்கட்டில் மாட்டிக் கொண்டாரே என்ற எண்ணத்தில் குருவைத் தேடி சீடன் புறப்பட்டான்.

அதே சமயம், அரண்மனைப்பணியாட்கள் அந்தக் குகைக்கு வந்து சேர்ந்தனர். சித்தரின் உடல் காவல் இல்லாத நிலையில் இருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டு, உடலை எடுத்துக்கொண்டு போய் அந்தக் குகையின் அருகிலேயே அகில் கட்டைகளின் மேல் கிடத்தி வெடியுப்பு, குங்கிலியம், வெங்காரம் இவற்றைப் பூசி மேலே விராலி இலைகளைப் பரப்பித் தீயை வைத்துவிட்டனர்.

சித்தரின் காயகல்ப தேகம் அழிந்தது. இனிமேல் இவர் நம்முடன்தான் இருந்தாக வேண்டும் என்ற சந்தோஷத்தில்

ராணி மிதந்தாள். ஆனால், அதேசமயம் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பாக இருக்கவும் ஆர்ம்பித்தாள்.

ஆனாலும், குணவதியின் சில நடவடிக்கைகள் சித்தருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தவே, ஒருநாள் வேட்டைக்குப் போவது போல் கிளம்பி, சதுரகிரி குகைக்குச் சென்றார். வழியில் குருராஜன் எதிர்படவே அவனையும் அழைத்துக் கொண்டு குகைக்குச் சென்றார்.

ஆனால், அங்கு திருமூலரின் உடல் காணப்படவில்லை. அப்பொழுதுதான் ராணி செய்த சூழ்ச்சி புலனாயிற்று. குருராஜனுக்கு ஆறுதல் கூறித் தவம் செய்ய அனுப்பிவிட்டுத்தான் மட்டும் அரண்மனைக்குத் திரும்பினார். குணவதி துரோகம் செய்திருந்தாலும் வீரசேனன் உடலிலிருக்கும் தான் அவளுக்கு துரோகம் செய்யக்கூடாது என்று தீர்மானித்தார்.

உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தான் சிறிது காலம் ஓய்வெடுத்துக் கொள்ள இருப்பதாகவும், அதனால் இனிமேல் மகாராணியே அரசாட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்றும் பிரகடனம் செய்தார்.

அரசரின் இந்த பிரகடனம் ராணியைத் திடுக்கிட வைத்தது. தான் விரும்பியது, அரசரின் துணையை மட்டுமேயன்றி அரசபோகத்தையல்லவே, இதென்ன திடீர் திருப்பம். நேரே வீரசேன திருமூலரிடம் சென்று "ஏன் இந்தத் திடீர் முடிவு?" என்று வினவினார்.

சித்தர் சிரித்துக்கொண்டாரே அன்றி, பதில் ஏதும் பேசவில்லை.

சித்தரின் மௌனம் அவளை வருத்தியது. ஒருசமயம் தான் செய்த கொடுஞ்செயலை சித்தர் அறிந்திருப்பாரோ? என்று எண்ணினாள். ஆயினும் இனியும் மறைப்பதில் அர்த்தம் இல்லை என்ற முடிவுடன் தான் செய்த சுயநலச் செயலைக் கூறித் தன்னை மன்னிக்குமாறு கண்ணீர் விட்டாள்.

குணவதியின் கண்ணீர் சித்தரின் மனதை வருத்தியது. அவள் நிலையிலிருந்து பார்த்தால் அவள் செய்தது சரியென்றே பட்டது. எந்த மனைவிதான்தன் கணவனைப் பிரிந்து வாழப் பிரியப்படுவாள். ஆயினும் நம்பிக்கைத் துரோகம் செய்யக் கூடாதல்லவா? இன்னும் சிறிது காலமே உயிரோடு இருக்கப்போகும் அவளது மனதை நாம் ஏன் நோக அடிக்க வேண்டும் என்று தீர்மானித்த சித்தர், "சரி அழாதே! ஏதாவது வரம் வேண்டுமென்றால் கேள், தருகிறேன்" என்றார்.

ராணியும் சற்றும் தாமதிக்காமல் சித்தர் என்றென்றும் வீரசேனன் உடலுடன் தன்னுடனே தங்கிவிட வேண்டும் என்ற ஆசையில், "நான் என்றைக்கும் தீர்க்கசுமங்கலியாக இருக்க அருள் புரிய வேண்டும்" என்று கேட்டாள். சித்தரும் புன்னகையுடன் அவள் கோரிய வரத்தை அளித்தார். சித்தர் வாக்கு பொய்க்காதல்லவா, இனி வீரசேன மகாராஜா தன்னை விட்டுப் போகமாட்டார் என்ற நினைவில் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள்.

ஒருநாள், நள்ளிரவு ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. வீரசேனத் திருமூலர் யாருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறி சதுரகிரியை நோக்கிச் சென்றார். பொழுது புலரும் தருணம், காலைக் கடன்களை

முடித்துக்கொண்டு நதியில் இறங்கி நீராடிக் கரை ஏறியவர் அங்கே பிராமணன் ஒருவன் அசையாமல் கற்சிலை போல் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து வியப்படைந்தார். அருகில் சென்று பார்த்தபோது அவனுடைய கண்கள் நிலைத்துப் போயிருந்ததைக் கண்டார். மூச்சு இயங்க வில்லை, தொட்டவுடன் அவன் உடல் அப்படியே கீழே விழுந்து விட்டது.

யாரிவர்? ஏனிந்த நிலை? திருமூலர் சிந்தித்தார்.

ஜம்புகேஸ்வரம் என்னும் திருவானைக்காவல் கோயிலில் இருந்தவர் ஜம்புகேஸ்வரர் என்னும் அந்தணர்; பிராணாயாமப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதற்காக சதுரகிரியை அடைந்து குருவின் துணையின்றி முரட்டுத்தன மாகப் பிராணாயாமப் பயிற்சியை மேற்கொண்டார்.

தகுந்த ஆலோசனை கூற குரு இல்லாததால் தன்னை அடக்க முயன்றவரை அது அடக்கிவிட்டு மூச்சு பறந்து விட்டது. மூச்சுக்காற்றை வெளியே விடத்தெரிந்த அந்தணன் அதனை உள்ளுக்குள் இழுக்கும் வித்தையை மறந்து விட்டான்.

வீரசேன திருமூலர் அந்த உடலை மறுபடியும் தொட்டுப் பார்த்தார். உடல் இன்னும் சூடாக இருந்தது. அவன் அப்பொழுதுதான் இறந்து போயிருக்க வேண்டும் என்பதை அறிந்த திருமூல வீரசேனர், இறைவனே தனக்கு அந்த உடலை அளித்திருப்பதாகக் கருதி அரச உடம்பை விட்டு, அந்தண உடம்பில் நுழையத் தீர்மானித்தார்.

கூடவே குணவதிக்குத் தாம் அளித்த வாக்குறுதியும் நினைவுக்கு வந்தது. வீரசேனன் உடலை சிரஞ்சீவி தன்மை

உடையதாக்கவும் நினைத்தார். அப்பொழுது தானே அவள் நித்தியசுமங்கலியாக இருக்க இயலும்.

அரச உடலை எங்கே விடலாம்? என்று சற்றும் முற்றும் திரும்பிப் பார்த்த பொழுது, அங்கிருந்த யானை உண்டி என்னும் பெருத்த மரம் தென்பட்டது. அந்த மரத்தில் பெரிய பொந்து ஒன்றும் இருந்தது.

வீரசேனத் திருமூலர் மரத்தை நெருங்கி பொந்துக்குள் நுழைந்து உட்கார்ந்தவர், மன்னர் உடம்பை அங்கேயே விட்டுவிட்டு, ஜம்புகேஸ்வரர் உடலில் புகுந்தார். இஃது மூன்றாவது கூடுவிட்டு கூடு பாய்ந்த செயல்.

வீரசேனர் உடலை சிரஞ்சீவித் தன்மையுடையதாக்க ஜோதி மரத்தின் பூக்களைப் பறித்து அதனுடன் சில மூலிகைகளைச் சேர்த்து நன்றாகக் குழைய அரைத்து, அந்தக் கரைசலில் மந்திர சக்தியை ஏற்றி, கரைசலை மரப்பொந்தில் இருந்த அரசனின் உடலில் தடவினார். மரத்தின் மேற்புறத்தைப் பட்டைகள், இலைகள், கிளைகளால் மூடினார்.

பிறகு சில மந்திரங்களை உச்சரித்தார். இப்பொழுது மரப்பொந்து மூடிக்கொண்டது. அரசனின் உடலைத் தன்னுள் வைத்திருக்கும் அந்த மரம் அரசமரம் என்று வழங்குவதாக என்று வாழ்த்திவிட்டு மீண்டும் தன் தவ வாழ்க்கையைத் தொட .ர்வதற்காக அந்த மலைமேல் மேலும் சென்றார்.

சதுரகிரி மலை உச்சி யிலுள்ள ஒரு குகையில் நீண்ட நாள் கடும் தவம் மேற்கொண்டு மறுபடியும் தேகத்தைக் காயகல்ப தேகமாக ஆக்கிக் கொண்டார்.

சதுரகிரியில் தவம் செய்யும் பல சாதகர்கள் ஜம்புகேஸ்வரத் திருமூலரை நெருங்கி, தங்களுக்கு வழிகாட்டும்படி வேண்டினர். அவரும் அவர்களைத் தம் சீடர்களாக ஏற்றுக் கொண்டார். இந்த நிலையில் குருராஜ சீடனும் வந்து சேரவே சதுரகிரி ஒரு தவச்சாலையாக திகழ்ந்தது.

வீரசேனத் திருமூலரைப் பிரிந்து வருத்த முற்றிருந்த குணவதி ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு சதுரகிரி மலையில் வசிக்கும் ஜம்புகேஸ்வரத் திருமூலரைத் தரிசிக்கச் சென்றாள்.

ஜம்புகேஸ்வரரும் அவளை அறிந்தும் அறியாதது போலவே அவளது குறையைக் கேட்டறிந்தார். தன்னை விட்டுப் பிரிந்து சென்ற மகாயோகியான தன் கணவரைப் பற்றிய விவரம் தனக்குத் தெரிய வேண்டும் என்றும், மீண்டும் அவருடன் வாழ வழி செய்யுமாறும் வேண்டினாள்.

மீண்டும் ஒரு பந்தத்தைத் தொடர விரும்பாத ஜம்புகேஸ்வரத் திருமூலர், அவளுடைய கணவர் தம் தவசக்தியால் அரச மரமாக உருமாறியுள்ளார் என்றும், அவரை அரசமர வடிவிலேயே கண்டுகளிக்க இயலும் என்றும், அந்த அரசமரத்தை பூசைகள் செய்வதனாலேயே அவள் பதிசேவை செய்ததன் பலன் அடைய முடியும் என்றும் அருளுரை வழங்கினார்.

குணவதியும் தன் வாழ்க்கையின் துரதிருஷ்ட நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்து, தான் செய்த சிறு தவறு தன் வாழ்க்கையில் எத்தனை பெரிய இழப்பை ஏற்படுத்தி விட்டது என்ற துயரத்துடன் அரச மரத்தினை வணங்கி நாடு திரும்பினாள்.

திருமூலர் வாழ்க்கையோடு துவாரகா பதியான கிருஷ்ணனுக்கும், மார்க்கண்டருக்கும் உபதேசம் செய்த புதிய செய்தியை அகத்தியர் கூறுகின்றார்.

மேருவுக்கு வடபாகத்தில் மலையை அடுத்திருந்த வனத்தில் திருமூலர்பிரான் ஒரு யாகம் செய்தார். உலக ஆசைகளைத் துறந்து, வினைப்பயன்களையும் விட்டுத் தமக்குத் தொண்டு புரிந்த சித்தர்களுக்கெல்லாம் உபதேசம் செய்தார். கண்ணபிரானுக்கும் உபதேசம் செய்தார்.*

"...யடவிக்கும் சென்றுதானும்
பண்டுளவு கிருஷ்ண பூபாலனுக்கு
பார்தனில் உபதேசம் செய்தார்"

துவாரகாதிபதியான கண்ண பெருமான் திருமூலரைச் சந்தித்ததாகவோ, அவரிடம் உபதேசம் பெற்றதாகவோ புராணங்களில் எங்கும் கூறப்படவில்லை. கிருஷ்ணன் துவாபர யுகத்தைச் சேர்ந்தவர். மகாபாரத காலததில் இருந்தவர். அக்காலத்திலேயே திருமூலர் இருந்தார் என்பது ஆய்வாளர்கள் தரும் புதிய செய்தி.

திருமுலர் கயிலாயத்தின்றும் புறப்பட்டு வரும் வழியில் மகா நதிக் கரையில் பூரி (ஜெகன்னாதம்) சமீபம் துவாரகாபுரி அரசர் கண்ணன் ஒரு வேடனால் கொல்லப்பட்டார். கொன்றவுடன் அவ்வேடன் அக்கண்ணன் சரீரத்தைச் சிதையில் வைத்துக் கொளுத்தி விட்டுப் போய்விட, உடனே பெருமழை பொழிய, கருகிய கைகால்களையுடைய கண்ணன் சரீரமானது வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டு பூரிக்குப் பக்கத்தில் ஒதுக்கி விடப்பட்டது. அவ்வூரார் கண்ணனை இனம் கண்டு அதனை அடக்கம்

* அகஸ்தியர் பனிரெண்டாயிரம் - இரண்டாம் பாகம் 951,952.

செய்து கோயில் அமைத்தார்கள். அதுவே இப்போதைய ஜெகன்னாதர் ஆலயம். இச்சம்பவத்தைத் திருமூலரே நேரில் கண்டதாகக் கூறுகிறார்.*

திருமூலரிடம் கண்ணன் பெற்ற உபதேசத்தைக் கூறாது விட்டதுபோல மார்க்கண்டேயன் திருமூலரைச் சந்தித்ததையும் யாரும் குறிப்பிடவில்லை. வேறு புராண நூல்களிலும் இலக்கியங்களிலும் இல்லாத இந்தச் செய்தியை அகத்தியர் மட்டுமே தருகின்றார்.**

மேருவுக்கு வடபாகத்தில் இருந்த வனத்தில் இரண்டு கைகளையும் தரையில் ஊன்றியபடி, உடம்பு கீழே படாமல் ஆசன நிலையில் தவம் செய்து கொண்டிருந்தார் திருமூலர்.

அவ்வனத்தின் வழியாக வந்து கொண்டிருந்த மார்க்கண்டர் மகாஞானக் கூடர் வீசிக் கொண்டிருக்கும் திருமூலரைக் கண்டார்.

தவநிலையிலிருக்கும் திருமூலர் பிரானைக் கண்டவுடன் மார்க்கண்டன் மனம் துடித்தது. என்றும் பதினாறு வயது பாலகனாகையால் திருமூலர் இருந்த நிலை கண்டு மிகவும் பயந்து போய்விட்டான்.

நடுநடுங்கியபடி திருமூலரின் கால்களிலே விழுந்து "ஐயனே யான் உமக்கு அபயம்" என்று பணிந்தான்.

இறைவனடியார்களை எல்லாம் பார்த்திருக்கிறேன். சித்தர்களைப் பார்த்ததில்லை. இன்று யான் செய்த புண்ணியத்தால் அத்தகைய அரிய காட்சியையும் கண்டு

---

* அகஸ்தியர் பன்னிரண்டாயிம் - இரண்டாம் காண்டம் 953-959.

** திருமந்திரம் - கழகம் - பக்.79.

தங்களைத் தரிசித்தேன். நீரே எமக்கு அபயமளித்தருள வேண்டும் என்று வேண்டி நின்றான்.

மார்க்கண்டரைப் பார்த்த திருமூலர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தவராக, மார்க்கண்டா, நீடாழியுலகு மட்டும் மூச்சடங்கி நெடுங்காலம் இருப்பதற்கு வரம் பெற்றாய். ஆனால், நீ பெற்ற வரம் நிலைக்க வேண்டுமென்றால் சுழிமுனையை உள்ளடக்கித் தவ செய் என்று திமூலர் உபதேசம் செய்தார்.*

சித்தர்கள் அழிந்து போகக்கூடிய உடலை என்றுமே அழியாத கற்ப தேகமாக்கிக் காலம்கடந்தும் யுக யுகங்களாக வாழக்கூடிய தன்மை பெற்றவர்கள். ஆகையால், அவர்கள் எக்காலத்திலும் எவ்வடிவத்துடனும் எவருடனும் அற்புதங் கள் நிகழ்த்த வல்லவர்கள். ஆகையால் நிகழ்கால வரலாற்றுச் சம்பவங்களுக்கும் கடந்த கால சம்பவங்களுக்கும் ஒத்துப் போகா பரிணாம கால இடர்பாடுகளை இவர்களின் வாழ்க் கையைப் பொருத்தவரை அப்படியே கொள்வதே சாலச் சிறந்தது.

நம் எல்லைக் கோட்டிற்குள் வர முடியாததாலேயே சித்தர்களின் செய்திகள் பொய்யாகி விட முடியாது. கால இடர்பாடுகளைக் கடந்து ஞானத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

திருமூலர் எண்ணாயிரம் திருமந்திரங்கள் இயற்றியதாக அகத்தியர் தமது கௌடிய சாகரம் என்னும் நூலில் கூறுகின்றார்.

அகத்தியர் பனிரெண்டாயிரம் முதல் காண்டத்தில் திருமூலர் இயற்றியதாகப் பின்வரும் நூல்கள் பட்டியலிடப் படுகின்றன.

* அகஸ்தியர் பனிரெண்டாயிரம் - முதல் காண்டம்

திருமூலர் காவியம் (கிரந்தம்)	8000
திருமூலர் சிற்ப நூல்	1000
திருமூலர் சோதிடம்	300
திருமூலர் மாந்திரிகம்	600
திருமூலர் சல்லியம்	1000
திருமூலர் வைத்திய காவியம்	1000
திருமூலர் வைத்திய சுருக்கிடை	600
திருமூலர் வைத்தியச் சுருக்கம்	200
திருமூலர் சூக்கும ஞானம்	100
திருமூலர் பெருங்காவியம்	1500
திருமூலர் தீட்சை விதி	100
திருமூலர் கோர்வை விதி	16
திருமூலர் தீட்சை விதி	8
திருமூலர் தீட்சை விதி	18
திருமூலர் யோக ஞானம்	16
திருமூலர் விதி நூல்	24
திருமூலர் ஆறாதாரம்	64
திருமூலர் பச்சை நூல்	24
திருமந்திரம் (பெருநூல்)	3000
திருமூலர் ஞானம்	84
திருமூலர் ஞானோபதேசம்	30
திருமூலர் நடுவணை ஞானம்	30
திருமூலர் ஞானக் குறிதிருமூலர்	30
திருமூலர் சோடச ஞானம்	16
திருமூலர் ஞானம்	11
திருமூலர் குளிகை	11
திருமூலர் பூஜா விதி	41
திருமூலர் வியாதிக் கூறு	100
குரு நூல் மூப்பு சூத்திரம்	200

ஆகிய நூல்கள் இயற்றியதாக குறிப்புக் கிடைக்கிறது.

மேலும் திருமந்திரம் பாயிரச் செய்யுள் உபதேசம் 30, மந்திரம் 300 (திருமந்திரமாலை), தமிழ் 3000 ஆகிய நூல்களைத் தாம் இயற்றியதாகவும் இம்மூன்றும் ஒரு தன்மையன என்றும் திருமுலர் கூறுகின்றார்.

இவற்றுள் நமக்குக் கிடைப்பவை ஒருசில மட்டுமே.

"நந்தியருள் பெற்ற நாதனை நாட்டின் நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி மன்று தொழுது பதஞ்சலி வியாக்ரமர் என்றிவர் என்னோ டெண்மருமாமே" என்று சிவலோகத்தில் ஈசனிடம் உபதேசம் பெற்ற எண்மரைப் பற்றிக் கூறுகிறார்.

நந்திகள் நால்வர் என்பது சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோராவார். இவர்களுடன் பதஞ்சலி மாமுனிவர், வியாக்ரம பாத முனிவர், அகத்தியர், திருமூலர் ஆகியோர் ஒரு சாலை மாணாக்கர்களாக திருமந்திரத்துள் குறிப்பிடப்படுகின்றது.

திருமூலருக்கு ஏழு பிரதான சீடர்கள் இருந்தமை திருமந்திரப் பாட்டால் புலனாகிறது.

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என் வழியாமே."

என்பதனால் மாலங்கன், இந்திரன், சோமன் (சந்திரன்), பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்ச மலையன் இந்த எழுவரும் அவர் சீடர்கள் என்று திருமூலரால் உணர்த்தப் பெறுகின்றது.

இவர்களில் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன் ஆகிய ஐவரும் திருமூலர் சிவலோகத்தில் இருந்த

காலத்திலும் மற்ற இருவர் பூலோகத்தில் வசித்த காலத்திலும் சீடர்களானார்கள் என்று கருதப்படுகிறது.

திருமூலர் பனிரெண்டு மடங்களை நிறுவி அவற்றுக்குத் தலைவர்களையும் நியமித்தார். அவருக்குச் சீடர்கள் பதினாறு பேர்கள். அப்பதினாறு சீடர்களில் காலாங்கியும், கஞ்சமலைச் சித்தருமே முக்கியமானவர்கள் என்று அகத்தியர் பனிரெண்டாயிரம் கூறுகின்றது.

காலாங்கர், அகோரார், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போக தேவர் முதலானோர் தமதருளால் அழியாமை பெற்றவர்கள் என்று திருமூலரே தம் திருமந்திரத்துள் குறிப்பிடுவதால் இவர் தம் பெருமை புலனாகிறது.

சிதம்பரம் நடராஜர் சந்நிதியில் உள்ள ஸ்ரீ மூலர் சந்நிதியில் உள்ள இலிங்கம் சுயம்புவாகத் தோன்றியது என்று கூறப்படுகிறது. இங்கு பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்கள் சிலா ரூபமாக எழுந்தருளியுள்ளனர்.

"நாளென்ற மேலச் சிதம்பரத்தில்
நாடிநின்ற திருமூலர் நாட்டடந் தானே."

என்று போக சித்தர் தமது ஜனன சாகரம் 312வது பாடலில் திருமூலர் சமாதியில் வீற்றிருக்கும் இடத்தைக் குறிப்பிடு கின்றார்.

அவர் குறிப்பிடும் திருமூலர் லிங்க வடிவாய் அமர்ந்துள்ள இடம் தில்லைத் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ மூலர் சந்நிதி என்று கருதப்படுகின்றது.

பாண்டிய மன்னனின் ஆணைப்படி திருமூலர் சமாதியை மூலவராகக் கொண்டு கருவூரார் சிதம்பரம்

கோயிலை அமைத்தார். பிற்காலத்தில் திருமூலர் லிங்க வடிவமாக எழுந்தருளிய இடம் என்பது மறைக்கப்பட்டுச் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளயுள்ள இடமாகக் கற்பிக்கப்பட்டு உமாபார்வதி என்ற பெயரில் ஒரு அம்மன் சந்நிதியும் இக்கோயிலில் சேர்த்து விட்டார்கள் என்று ஆய்வாளர் பலரால் நம்பப்படுகிறது.

திருமூலருக்குப் பின் காலாங்கி நாதரின் வழியாகப் போக சித்தரும் அவரின் சீடர்களும் சித்தர் நெறியை உலகெங்கும் பரவச் செய்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் 'திருமூலவர்க்கத்தார்' என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று. அதனால் திருமூலரின் புகழ் என்றும் நிலைப்பதாயிற்று.

❊ ❊ ❊

रं

ऌं

गं

குறிஞ்சி
20ஏ, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
போன்: 26502086.